
## ஆங்கிலத்தில் பெரியார் எழுத்து!




இந்து மதவெறி அரசியல் குறித்த எச்சரிக்கை, தமிழ்நாட்டு மக்களிடம் ஆழமாக உள்ளதை நாம் அறிவோம். அந்தப் புரிதலை, உருவாக்கியவர்களில் தந்தை பெரியாருக்கு தனி இடம் உண்டு, என்பது வரலாறு. 1949-ஆம் ஆண்டு அவர் எழுதிய 'பொருள்முதல்வாதம்' என்கிற நூலுக்கும் தனி இடம் உண்டு.

மத மூடநம்பிக்கைகளைப் பகுத்துப் பார்க்க பெரியார் எழுதிய நூல்தான் 'பொருள்முதல்வாதம்'. மூடநம்பிக்கைகளால் பகுத்தறிவை இழக்கும் மக்கள், தங்களின் பொருளாதார பலத்தையும் இழக்கின்றனர் என்கிற கருத்தினை, அந்த நூலில் பெரியார் முன்வைத்தார். பல்வேறு காலகட்டங்களில் அவர் எழுதிய கட்டுரைகளை, அவரே தொகுத்து 'பிருகிருதவாதம்' அல்லது 'மெட்டீரியலிசம்' என்ற பெயரில் வெளியிட்டார்.

'மோட்சம்', 'நரகம்' என்பது எல்லாம் மக்களை ஏமாற்றி, பணம் பறிக்கும் செயல் என்றும், 'அது குழந்தைகளைப் பூச்சாண்டி வருகிறான்' என்று கூறி ஏமாற்றுவது போன்றது என்றும், 'சொர்க்கம்' என்று சொல்வது 'மிட்டாய்' கொடுத்து ஏமாற்றுவது போன்றது என்றும், எளிமையாக விளக்கியிருப்பார். கடவுள், மதம், ஒழுக்கம், இன்பம், தலைவிதி எனப் பல தலைப்புகளில் பெரியார் பொருள்முதல்வாத தத்துவத்தை விளக்கியிருப்பார்.

'பொருள்முதல்வாதம்' என்ற கருத்தியல், ஐரோப்பிய தத்துவவாதிகள் நீண்ட காலம் விவாதித்து வந்ததுதான். அதைத் தமிழுக்குக் கொண்டுவந்தது பெரியாரின் எழுத்துகள். பெரியார் அனைத்து மக்களுக்குமான மானிட விடுதலையைப் பேசியதுபோல, அவரது எழுத்துகளும் தமிழைத் தாண்டிக் கொண்டு செல்லும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதில் ஒரு முயற்சியாக 'பொருள்முதல்வாதம்' நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தில்லைநாயகம் அவர்களின் மொழிபெயர்ப்பில், ரூ.150 விலையில், கலப்பை பதிப்பகம் வெளியிட்டுள்ளது. நூலினைப் பெற 94448-38389 என்ற எண்ணுக்கு அழைக்கலாம்.

மதத்தாலும் மூடநம்பிக்கை அரசியலாலும் மக்கள் பிளவு படுத்தப்படும் காலத்தில், பெரியார் அனைத்து மொழிகளுக்கும் மக்களுக்கும் சென்று சேரவேண்டும். அதில் சிறுமுயற்சிக்கு ஆதரவு திரளட்டும்.

## ஃப்ளாஷ்பேக்





காலனி செந்தில்

### சிறையில் தளபதியின் ஆறுதல்!

1984-ஆம், ஆண்டு முதல் நான் கழக உறுப்பினராக இருக்கிறேன். கிளைக்கழகச் செயலாளர், கரூர் ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர், மாவட்ட மாணவர் அணித் துணை அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர் மற்றும் இரண்டு முறை தலைமைச் செயற்குழு உறுப்பினர் என, எனது கழகப் பணி தொடர்கிறது. 2017-ஆம் ஆண்டில், தளபதி அவர்களை சட்டசபையில் அவமதித்ததைக் கண்டித்து, கரூரில் சாலை மறியல் செய்து கைதாகி, திருச்சி மத்திய சிறையில் 77 பேர் இருந்தோம். அதைக் கேள்விப்பட்ட நம்முடைய பாசத் தலைவர் தளபதி அவர்கள், திருச்சி மத்திய சிறைக்கே வருகை தந்து எங்களுக்கு ஆறுதல் கூறினார். இந்தப் படம் 2002-ஆம் ஆண்டு தளபதி அவர்கள் கரூர் வந்த போது எடுத்தது.

**– காலனி செந்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கரூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கொந்தளிப்பான செப்டம்பர் மாதம்!

1981-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், கழகத்துக்கு அப்போதைய அரசால் கடும் நெருக்கடிகள் ஏற்பட்டன. செப்டம்பர் 15-ஆம் தேதி, கைது செய்யப்பட்ட கலைஞரை விடுவிக்கக் கோரி, போராட்டங்களும், பல இடங்களில் தொண்டர்கள் தீ குளிப்பு நிகழ்வுகளும் நடைபெற்றன. 29-ஆம் தேதி, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு மீண்டும் சிறைக்கு அனுப்பப்பட்டார் கலைஞர். காவல் நீட்டிப்புச் செய்தி கேட்டு மீண்டும் கொந்தளிப்பு ஏற்பட்ட நிலையில், அரசின் சார்பில் அளிக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று கலைஞரை அன்றைய தினமே விடுதலை செய்தது நீதிமன்றம்.

## சீரணி ⟹ இளைஞர் அணி

29

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...**

ஓவியம் : ரவி பேலட்




# கலைஞர்-48... சீரணியின் 48!

*முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தனது 48-வது பிறந்த நாள் முதல் ஒவ்வோர் ஆண்டும் புதிய புதிய மக்கள் நலத் திட்டங்களைத் தொடங்கி, செயல்படுத்தி வந்தார். அப்படி தனது 48-வது பிறந்த நாளின் போது 'கைரிக்ஷா ஒழிப்புத் திட்டம்' கொண்டு வந்தார்.*

*அவரது அந்தப் பிறந்த நாளின்போது, தொழிலாளர் நல அமைச்சராக இருந்த என்.வி.நடராசன் அவர்கள் தலைமையிலான **'சீரணி இயக்கம்'**, சென்னையில் பேருந்துப் பயணிகளின் வசதிக்காக 48 நிழற்குடைகளை அமைக்க முடிவெடுத்தது. இது தொடர்பாக, 1971-ஆம் ஆண்டு மே 19-ஆம் தேதியிட்ட 'நம்நாடு' இதழில் செய்தி வெளிவந்துள்ளது. அப்போது அமைச்சர் பேசியதாவது:*

*"தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி 48-வது பிறந்த நாள் ஜூன் 3-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, சென்னையில் 48 இடங்களில் பஸ் பயணிகளுக்கு நிழல் தரும் சிமெண்ட் கொட்டகைகள் அமைக்கப்படும். இந்தக் கொட்டகைகளை, சீரணித் தொண்டர்கள் உதவியுடன், சென்னை நகரில் உள்ள 12 சட்டமன்றத் தொகுதிகளிலும் தொகுதி ஒன்றுக்கு 4 வீதம் மொத்தம் 48 சிமெண்ட் கொட்டகைகள் அமைக்கப்படும். இந்த முயற்சிக்கு அரசுப் பணம் எதுவும் செலவிடப்படமாட்டாது.*

*சீரணித் தொண்டர்களின் உழைப்பு, மக்கள் அளிக்கும் நிதி ஆகியவற்றைக் கொண்டுதான் இத்திட்டம் நிறைவேற்றப்படும். அதற்கு ரூ.30 ஆயிரம் செலவாகக் கூடும். பஸ் பயணிகள் நிற்குமிடம் ஒன்றைக் கட்டுவதற்கு மாநகராட்சிக்கு ரூ.1,500 செலவாகும். சீரணியினர் முடிப்பர். இந்த நிலையங்களில் 'முதல்வர் கலைஞர் 48-வது பிறந்த நாள் பேருந்துப் பயணிகள் சீரணிக் கூடம்' என்ற பெயர்ப் பலகை இருக்கும்" என்றார்.*

**சீரணித் தொண்டர்களின் உழைப்பு, மக்கள் அளிக்கும் நிதி ஆகியவற்றைக் கொண்டுதான் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.**

### முன்னாள் சீரணித் தொண்டர்... பின்னாளில் அமைச்சர்!

இளைஞர் அணியின் தொடக்கக் காலத்தில் நிர்வாகிகளாக இருந்தவர்கள், இன்று அமைச்சர்களாக உயர்ந்திருக்கிறார்கள். அதுபோல அன்று சீரணியில் தொண்டர்களாக இருந்தவர்களும் பின்னாளில் அமைச்சர்களாக உயர்ந்துள்ளனர். அவர்களில் ஒருவர் அறநிலையத்துறை அமைச்சராக இருந்த மு.கண்ணப்பன். காஞ்சிபுரத்தில் செங்கற்பட்டு சீரணித் தொண்டர்கள் பயிற்சி முகாமை, அவர் தொடங்கி வைத்த செய்தி 1971-ஆம் ஆண்டு மே 11-ஆம் தேதியிட்ட **'நம்நாடு'** இதழில் வெளியாகியுள்ளது. அதில் அமைச்சர் பேசியதன் விவரம்:

"பண்டைக் காலத்தில் நாட்டிற்குத் தேவைப்பட்ட பல பொதுக் காரியங்களை மக்களே செய்து வந்தனர். அதையொட்டி, மக்களே தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளத்தான் அண்ணா இந்தத் திட்டத்தை உருவாக்கினார். நான் கூட ஆரம்பத்தில், கோவை மாவட்டத்தில் சீரணித் தொண்டனாகப் பணியாற்றி வந்தேன்.

இந்தப் பயிற்சி முகாம், 20 ஆயிரம் ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டிருக்கிறது. அண்ணாவால் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம், நாட்டு மக்களுக்கு உதவும் திட்டம். இதற்கு நீங்கள் ஒத்துழைப்புத் தந்து இந்தப் பயிற்சி முகாமை நல்ல முறையில் நடத்திக் கொடுக்குமாறு வேண்டுகின்றேன்" என்றார்.

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி

29

**கோவி.லெனின்**

**"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."**



# அபத்தக் கேள்விகளும் அக்கறை அரசும்!

*தி.மு.க. பிரமுகர்களே பல்லாயிரம் கோடி முதலீடுகள் உள்ள தொழில்களை நடத்தும்போது, முதலமைச்சர் ஏன் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, அமெரிக்கா வரை போனார் என்று, 'ஊடக அறிவாளிகள்' சிலர் கேட்கிறார்களே?*

தமிழ்நாட்டைச் சேர்ந்த தி.மு.க., அ.தி.மு.க, பா.ஜ.க. மற்றும் இத்தகைய அறிவாளி ஊடகத்தினருக்கு சோறும் போட்ட முதலாளிகள் எனப் பலரும் இந்த மாநிலத்தில் முதலீடு செய்திருக்கிறார்கள். திராவிட மாடல் அரசின் 'ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர்' என்கிற தமிழ்நாட்டின் பொருளாதார இலக்கை அடையவேண்டும், என்பதுதான் முதலமைச்சர் அமெரிக்கப் பயணத்தின் முதன்மையான நோக்கம். ஃபார்ச்சூன்-500 எனப்படும் உலகின் முன்னணித் தொழில் நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக, தமிழ்நாட்டிற்குப் புதிதாக 7ஆயிரத்து 616 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கவிருக்கிறது. கூகுள் நிறுவனத்துடன் போடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில், செயற்கை நுண்ணறிவுத் துறையில், 'நான் முதல்வன் திட்டத்தின்' கீழ், 20 இலட்சம் தமிழ்நாட்டு மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட இருக்கிறது.

**'மைக்ரோசாப்ட்', 'ஆப்பிள்'** நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டிருப்பதுடன், **'ஃபோர்டு கார்'** நிறுவனம் மீண்டும் தமிழ்நாட்டில் தனது உற்பத்தியைத் தொடங்குவதற்கான உத்தரவாதமும் தரப்பட்டுள்ளது. இவற்றைச் செய்தியாகக்கூடப் பதிவு செய்ய மனமில்லாத ஊடக அறிவாளிகள்தான், தி.மு.க. பிரமுகர்களே முதலீடு செய்திருக்கலாமே, என அபத்தக் கேள்விகளை எழுப்புகிறார்கள்.

முதலமைச்சரின் பயணத்தில் ஈர்க்கப்பட்ட முதலீடுகளின் அளவு குறித்து, பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியிருக்கிறார். திராவிட மாடல் ஆட்சியைப் பொறுத்தவரை, எவ்வளவு முதலீடு என்கிற தொகையை விட, அந்த முதலீடு எந்த அளவுக்குத் தொழிலகங்களாக மாறி, எந்தெந்தப் பகுதி மக்களுக்கு வேலைகளை வழங்குகிறது என்பதில், முதலமைச்சர் அக்கறையுடன் செயல்படுகிறார். அதனால்தான், சென்னையில் மட்டுமின்றி கோவை, திருச்சி, ஓசூர் எனப் பல இடங்களிலும் தொழில் நிறுவனங்கள் தொடங்குகிற வகையில், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. டாக்டர் அன்புமணி ராமதாசுக்கு வாக்குரிமை உள்ள 'தைலாபுரம் தோட்டம்', திண்டிவனம் தொகுதிக்குட்பட்டது. அந்தத் தொகுதியில்தான் புகழ்பெற்ற 'டாபர்' நிறுவனம் தனது தொழிற்சாலையை அமைக்க இருக்கிறது.

**கோவை, திருச்சி, ஓசூர் எனப் பல இடங்களிலும் தொழில் நிறுவனங்கள் தொடங்குகிற வகையில், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.**

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

606

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131